**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DINDIGUL.**
**Date : 26.03.2026.**
**CC.No. 322/2024.**

(எதிரி ஆஜர். சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்)

**அ.சா. 1 திரு. சண்முகம், த/பெ. சடையன்.**

**<u>குறுக்கு விசாரணை :-</u>**

இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்று கேட்டால், காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். எத்தனை முறை விசாரித்தார்கள் என்று கேட்டால், ஒரு முறை விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்தவாறு சொன்னேன். விபத்து 06.05.2024ம் தேதி நடந்தது. இந்த விபத்தில் பாதிக்கப்பட்ட எனது மகனை திண்டுக்கல் மருத்துவமனையில் தான் முதலில் சென்று பார்த்தேன். மருத்துவமனைக்கு என்னுடன் யார் வந்தது என்று கேட்டால், எனது மனைவி உடன் வந்தார். போலீசார் அங்கு வந்து விசாரித்தார்களா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் புகார் எத்தனை நாட்கள் கழித்துக் கொடுத்தேன் என்று கேட்டால் நினைவில்லை. புகாரை யார் எழுதியது என்று கேட்டால், காவல் நிலையத்தில் காவலர் எழுதினார். ஆஜர் எதிரியை முதல் விசாரணையில் தெரியும் என்று சொல்வதைப் போல, போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. இரண்டு நாட்கள் கழித்து காவல் நிலையத்தில் எதிரியைப் பார்த்தேன். CCTV கேமராவைப் பார்த்தபோது, ஒரு சிவப்பு கார் வந்து என் மகனை இடித்தது பதிவாகியுள்ளதை போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேனா

என்றால் சொல்லியிருக்கிறேன். அந்த சிவப்பு காரை ஓட்டி வந்தது இந்த எதிரிதான் ஓட்டிவந்தது என்று விசாரித்து தெரிந்து கொண்டேன் என போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். புகாரை என்னிடம் படித்துக் காட்டினார்களா என்றால் படித்துக் காட்டினார்கள். புகாரில் உள்ள விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். புகாரில் என் மகன்தான் ராயல் என்பீல்டு வண்டியை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச் சென்று காரின் இடதுபுறம் மோதி விபத்து ஏற்பட்டது என்று பிரபு மற்றும் வீரக்குமார் தகவல் சொல்லி தெரிந்து கொண்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் மகன் வேகமாக ஓட்டிக் கொண்டு போனாரா இல்லையா என்பது பற்றி எனக்குத் தெரியாது. பிரபு மற்றும் வீரக்குமார் விபத்து சம்மந்தமாகத்தான் தகவல் சொன்னார்கள். நான் CCTV வீடியோவைப் பார்க்கவில்லை என்றால் சரிதான். என் மகன் அஞ்சலி டவுண்டான மேம்பாலத்தில் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச் சென்றுதான் விபத்து ஏற்பட்டது என்றாலும், ஆஜர் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கிற்காக பின்னீடு எதிரி மீது குற்றம் சுமத்ததப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court on 26.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.03.26 15:06:34 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.